DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC.150/2024. |
| Deposition of Witness for | : | P.W.8 |
| Name | : | **இந்துமதி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2, 3-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3-ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02.09.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கல்லுவழியில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லுவழி அரசு பள்ளியில் சமையல் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் காயம்பட்ட சாட்சிகள் மற்றும் புகார்தாரர் ஆகியோரை தெரியும். அனைவரும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். வழக்கு சம்பவகாலத்தின் போது நான் புகார்தாரர்மற்றும் காயம்பட்ட சாட்சிகளின் வீட்டுக்கருகில் குடியிருந்து வந்தேன். கடந்த 26.01.2024ம் தேதி காலை 6.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது அ.சா.4 ஜோபின் என்பவர் எனது வீட்டிற்கு வந்து யாரோ வந்து வீட்டில்

வைத்து தன்னை அடித்து விட்டதாகவும் அதனால் பள்ளிக்கூடம் வர இயலாது என்று என்னிடம் சொன்னார். அ.சா.4 ஜோபின் என்பவருக்கு தலையின் பின்புறத்தில் காயம் இருந்தது.

2. நான் அ.சா.4 ஜோபின் என்பவரிடம் கேட்டபோது சம்பவ்ம குறித்து தனது அத்தை மற்றும் மாமாவிற்கு தகவல் தெரிவித்துவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் அவரது வீட்டிற்கு செல்வதற்கு முன்பாகவே அ.சா.4 ஜோபின் என்பவருடைய அத்தை மற்றும் மாமா அங்கு வந்துவிட்டார்கள். நான் மற்றும் அ.சா.4 ஜோபின் என்பவரின் அத்தை மற்றும் மாமா ஆகியோர் வேதபோதகர் என்பவர் வீட்டிற்கு சென்றபோது சின்னப்பன், உபகாரமேரி, ஜெர்லின் மற்றும் ஜோபின் மற்றும் வேதபோதக அரசி ஆகியோர் ரத்தக்காயத்துடன் இருந்தார்கள். காயம்பட்ட அனைவரும் மயக்கமாக இருந்ததால் ஆம்புலன்சு வரவழைத்து காயம்பட்ட அனைவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் வேதபோதக அரசியை சம்பவம் பற்றி கேட்டபோது யாரோ தன்னை அடித்துவிட்டதாக சொன்னார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வேதபோதக அரசியிடம் சம்பவம் பற்றி கேட்டேனா என்றால் சம்பவத்திற்கு பிறகு மருத்துவனையிலிருந்து திரும்பி வந்த 4, 5 நாட்கள் கழித்து சம்பவம் குறித்து கேட்டேன். சம்பவம் குறித்து வேதபோதக அரசி என்ன கூறினார் என்றால் என்ன நடந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். சம்பவம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.4 ஜோபின் காலை 6.30 மணியளவில் என்னுடைய வீட்டிற்கு வந்தாரா என்றால் வந்தார்.

2. சம்பவம் குறித்து போலிசார் என்னிடம் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள் எத்தனை மணி என்று தற்போது ஞாபகமில்லை. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அ.சா.4 ஜோபின் என்னிடம் எதுவும் கூறவில்லை என்றும் வேதபோதக அரசி குடும்பத்தார்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேதபோதக அரசியை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு காளையார்கோவிலில் உள்ள அவரது நாத்தனார் வீட்டில் வைத்து பார்த்தேன். இந்த விபரத்தை தான் போலிசாரிடம் கூறினேன் என்றால் சரிதான்.

**2 மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.02 17:18:52 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை**..